## கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா வரை விசேட பாதுகாப்பு நடவடிக்கை!

(கொழும்பு) கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் வரை பொலிசாரும், இராணுவமும் கடந்த சில நாட்களாக விசேஷமான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 30 இதழ் 210
யாழ்ப்பாணம் புதன்கிழமை 15 - 9 - 1993

## ஹெப்பிடைட்டிஸினால் பதினைந்து தாதிகள் மரணம்

(கொழும்பு) ஹெப்பிடைட்டிஸ் நோயினால் இதுவரை பதினைந்து மருத்துவ தாதிகள் மரணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நீர்கொழும்பு ஆதாரவைத்தியசாலையில் கடமை புரியும்
(4-ஆம் பக்கம் பார்க்க)

## ஐயாயிரம் இந்தியபடையினர் சோமாலியா விரைவு

(மொகாதிசு) சோமாலியாவில் அமைதி காக்கும் பணியில் ஈடுபட ஐயாயிரம் இந்தியப் படையினர் செல்லவுள்ளனர். இதில் 500 இந்திய படையினர் நேற்று சோமாலியா வந்து சேர்ந்தனர். பாகிஸ்தானும் 5 ஆயிரத்து 50 அமைதிப்படையினரை அனுப்பி வைத்துள்ளது.
(4-ஆம் பக்கம் பார்க்க

## ★ இந்தியா இலங்கையிடம்

# வடக்கு-கிழக்கு கடல் தடையை மீளாய்வு செய்யக் கோரிக்கை

## இரு நாட்டு உறவுகளும் முறுகல் நிலையில்

(புதுடில்லி)

இலங்கையின் வடக்கு - கிழக்கு கடல் பிரதேசத்தில் படகுகள் செல்லக்கூடாது என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா விதித்துள்ள கடல் தடையை மீளாய்வு செய்யுமாறு இந்தியா, இலங்கை அரசிடம் கோரியுள்ளது. இத்தடைச்சட்டம் நீக்கப்படாத பட்சத்தில் இந்திய இலங்கை நல்லுறவுகள் முறிந்துவிடும் ஆபத்து நிலைக்கு வந்துவிடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இலங்கை கடற்படைக்கு சொந்தமான பீரங்கி படகை, விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் தாக்கி அழித்ததை அடுத்து இலங்கை அரசு கடல் தடைச்சட்டத்தை கொண்டுவந்தது.

இத்தடை சட்டத்தால் இந்திய மீனவர்கள், இப்பகுதிகளில் மீன்பிடிக்கும் உரிமையை வெகுவாக பாதிக்கும் என டெல்லியிலுள்ள அதிகாரிகள் கருதுகின்றனர். அண்மையில் வடகடலில் இந்திய மீனவர்களின் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டு ஒருவர் பலியானதும் குறிப்பிடத்தக்கது.

அரசியல் ராஜதந்திர வழியிலே இவ்வாறு இந்தியா கேட்டிருந்த போதும் இந்த தடைச் சட்டத்தை இந்தியா விரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. 1970 களிலே கையெழுத்தான இந்திய - இலங்கை உடன்படிக்கைகளை இச்சட்
(4-ம் பக்கம் பார்க்க)

## இஸ்ரேல் - ஜோர்தான் இன்று அமைதி ஒப்பந்தம்

(வாஷிங்டன்)

இஸ்ரேலும் பாலஸ்தீன விடுதலை இயக்கமும் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்ட சூட்டோடு, இஸ்ரேலும் ஜோர்தானும் சமாதான உடன்படிக்கையில் இன்று கையெழுத்திடவுள்ளன.

40 ஆண்டுகாலபகைமையை நீக்கும் வகையில் இந்த உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன்படி 1967ம் ஆண்டு போரின்போது தான் கைப்பற்றிய இரு சிறு பகுதிகளையும் ஜோர்தானுக்கு கையளிக்க இஸ்ரேல் உடன்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (கே-ரி)

## தமிழ்பகுதிகளுக்குவழங்கிய பல உணவுப் பொருள்கள் சிங்களவருக்கு விநியோகம்

(யாழ்ப்பாணம்) உலக உணவுத்திட்டம் என்ற நிறுவனமும் நோர்வே, சுவிஸ் ஆகிய நாடுகளும் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கென வழங்கிய உதவிகளை சிறிலங்கா அரசு சிங்களப்பகுதிகளுக்கு வழங்கியுள்ளது. வடக்கு கிழக்குப்பகுதிகளில் பாதிக்கப்பட்டுள்ள 55,000 பேருக்கு ஒரு வருடத்திற்கான உதவிகளை மேற்படி நாடுகள் வழங்கியுள்ளன.
(4-ம் பக்கம் பார்க்க)

## கருத்து வேறுபாடுகளை நீக்க இலங்கைத் தரப்பு முயற்சி

(கொழும்பு)

இலங்கையின் வட - கிழக்கு கடற் பகுதியில் படகு போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டதினால் இந்தியா கொண்டுள்ள கருத்து வேறுபாடுகளை நீக்கும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக இந்தியா கொண்டுள்ள அதிருப்தி விரைவில் தீர்க்கப்படும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து இந்திய அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து வருவதாகவும் அவர் கூறினார். (கே - ரி)

## கொழும்பில் புலிகளுக்கு எதிராக செயற்படுவோருக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

கொழும்பு நகரில் விடுதலைப் புலிகளுக்கெதிரான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குபவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. புலிகளுக்கெதிராக நடவடிக்கை எடுப்போர், தகவல்கள் வழங்குவோர் மீது கொழும்பில் கடும்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரு
(4-ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

பூநகரிப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும்இடையில் கடந்த வெள்ளியன்று இரவு திடீர் மோதல் ஒன்று இடம்பெற்றது.

இம்மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த
(4-ம் பக்கம் பார்க்க)

## கடற்படையினர் ரோந்து வடபகுதிக் கடலில் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வடபகுதிக் கடலில் சிறிலங்கா கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடல்தடைச் சட்டத்தைக் கண்காணிக்கும் வகையில் கடற்படையினர் தமது கண்காணிப்பை இக்கடலில் தீவிரப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரவுபகல் வேளைகளிலும் கடல் ரோந்தினை மேற்கொள்ளுமாறு கடற்படை உயர் வட்டாரங்கள் வடபகுதியிலுள்ள படையினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் தெரியவருகிறது. (கே)

## இன்று முதல் தியாகி திலீபன் நினைவு நாள் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழின விடுதலைக்காக தன் இன்னுயிரை அர்ப்பணித்த தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவுதினம் இன்று முதல் தமிழ் பிரதேசமெங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இன்று ஆரம்பமாகும் திலீபன் நினைவுதினம் எதிர்வரும் 26-ம் திகதிவரை அனுஷ்டிக்கப்படும். வீதிகள் மற்றும் பொதுஇடங்கள், சந்திகள் தோறும் கறுப்பு மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளதுடன் திலீபனின் தீர்க்கதரிசன கருத்துக்களைக் கொண்ட பதாகை
(4-ஆம் பக்கம் பார்க்க)

**மணிவாக்கு**

"நிகழ் காலத்தை விலை கொடுத்துத் தான் எதிர் காலம் வாங்கப்படுகின்றது"
—ஜேம்ஸ் ஜான்சன்

# நமது நோக்கு

## வரலாற்றுத் திருப்பம்!

இஸ்ரேல் - பலஸ்தீனிய இயக்க ஒப்பந்தம் வெகு கோலாகலமாக அமெரிக்காவில் கைச்சாத்திடப்பட்டிருக்கின்றது.

ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா ஆகிய மூன்று கண்டங்களையும் இணைக்கும் பாலமாக விளங்குவது பலஸ்தீனம்.

இது, யூதர்களின் கனவுலகமாகவும் பலஸ்தீனியர்களின் தாயகமாகவும் விளங்கி வந்தது.

முதலாவது உலகப் போரின்போது (1914–18) அராபியர் பல ஐரோப்பிய நாடுகளுக்கு அடிமைகளாக இருந்தனர். அவர்களின் சுதந்திரத்திற்கு உதவுவதாகக் கூறி, பிரித்தானியா ஒத்துழைப்புக் கோரியது.

அதேவேளை போரின் பிற்பகுதியில் யூதர்களின் உதவிக்காக 2-11-1917-ல் 'பல்பூர்' பிரகடனத்தை (Balfour Declaration) பிரித்தானியா வெளியிட்டது. அதன்படி, புராதன புண்ணிய பூமியான பலஸ்தீனத்தில் உள்ள ஜெருசலத்தை யூதர்களின் தாயகமாக்குவதே பிரித்தானியாவின் நோக்கம் எனத் தெரிவித்தது.

அரபுகளுக்கும், யூதர்களுக்கும் பிரித்தானியா ஆசை காட்டி, போரில் வென்றதும், மெல்ல ஒதுங்கியது. அமெரிக்கா தலையிடவேண்டிய நிலை ஏற்பட்டது. விளைவு? 1948 மே மாதம் ஐ. நா. வின் ஆதரவில் இஸ்ரவேல் என்ற நாடு பலஸ்தீனத்தில் தோன்றியது;

பலஸ்தீனியர்கள் நாடிழந்தனர்.: அகதிகளாகப் பல அரபு நாடுகளில் தஞ்சம் புகுந்தனர். 1964-ல் அரபாத் தலைமையிலான பாலஸ்தீன இயக்கம் தோன்றி, பாலஸ்தீனத்தை மீட்டிடப் போராடியது.

விழித்தெழுந்த மேற்குலகு இதனைப் 'பயங்கரவாதம்' என்ற முலாம் பூசி, பிரசாரம் செய்தது.

ஆனால், இன்று அமெரிக்காவே தலையிட்டு, ஒப்பந்தத்தை உருவாக்கி, வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

போரில் கைப்பற்றிய சில இடங்களிலிருந்து, இஸ்ரேலிய இராணுவம் வாபஸ் பெறும்; பாலஸ்தீனர் மீண்டும் குடியேறுவர். கட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சி அமையும்.

நமக்குரிய பாடம் என்ன? இன்று சிறிலங்கா இனுதியதி 'பயங்கரவாதம்' என்ற பல்லவி பாடுகிறார். மேற்குலகம் அதே பல்லவியைப் பலகாலம் பாடியது! பாடு எடுபடவில்லை!

முதல் நம்பர் பயங்கரவாதி என வர்ணிக்கப்பட்ட யசீர் அரபாத் இஸ்ரேலியப் பிரதமருடன் கைகுலுக்கியுள்ளார். இதனிவு பெறுவார்களா தென்பகுதித் தலைவர்கள்!

# சதாரண மனிதனுக பிறந்து தியாகியாகிவிட்ட திலீபன்

சாதாரண மனிதனாகப் பிறந்து போராளியாய் வளர்ந்து பெரும் தியாகி ஆகிவிட்டவர் திலீபன். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பாசறையில் நின்று தமிழ் ஈழத் தெருவெங்கும் போர்ப் பரணி பாடிய விடுதலைக் குயில் திலீபன்.

திலீபனுடைய வாழ்க்கை அவரது பின்னாலே வருகின்றவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக திகழ்கிறது. ஒரு விடுதலை வீரனுடைய சாவு ஆயிரமாயிரம் வீரர்களை உருவாக்கித்தரும் என்பது இன்றைய வரலாறு உணர்த்தி நிற்கும் பாடம்.

புன்னகை தவழும் உதடு, கேட்போரை எளிதில் தன் பக்கம் ஈர்க்கும் பேச்சு, பார்ப்போர் எவரையும் கவரும் வசீகரத்தோற்றம் நிறைந்தவர் திலீபன். இயக்கத்தின் செயற்பாடுகளில் கண் துஞ்சாது முழுமூச்சுடன் அவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியன.

இராணுவத் தாக்குதலாக இருந்தாலும் சரி, அரசியல் நடவடிக்கையாக இருந்தாலும் சரி திலீபனின் பங்கு விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் அன்றைய சூழலில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இவரது திறமையையும் செயற்பாட்டையும் இனங்கண்டு கொண்ட விடுதலைப் புலிகளின் தலைமையானது யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளராக நியமித்தது.

திலீபன் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளராக இருந்து பணியாற்றிய காலம் மிக முக்கியமான தொரு காலமாகக் கருதப்படுகின்றது.

பெண்களை முதன் முதலாக ஆயுதம் ஏந்திப் போராடவைத்த பெருமையும் திலீபனையே சாரும். பெண்களுக்கென "சுதந்திரப் பறவைகள்" என்னும் அமைப்பை ஏற்படுத்தி அதனூடாக பெண்களின் அணியைத் திரட்டி அவர்களை போராளிகளாக உருவாக்க பெரும்பாடு பட்டவர்.

1987ம் ஆண்டு ஜூலை 29ம் திகதி இந்திய- இலங்கை ஒப்பந்தம் என்ற ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டு இந்திய அரசு அமைதிப் படை என்ற பெயரில் தனது இராணுவத்தை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் குவித்தது. இந்தியாவின் இந்தப் போக்கினால் திலீபன் மிகவும் வேதனையுற்று இருந்தார்.



இந்தியா தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்து விட்டதென சகல இடங்களிலும் ஆணித்தரமாக எடுத்துரைத்தவர்.

ஆயுதங்களை எடுப்பதில் இருந்த அக்கறை தமிழர் பிரச்சனைக்கு தீர்வுகாண்பதில் இந்திய அரசிடம் இருக்கவில்லை. இந்திய அரசு தமிழீழ போராட்டத்தை நசுக்கும் நோக்குடன் பல வழிகளிலும் ஈடுபட்டு வந்ததனை சகிக்க முடியாத திலீபன் 5 கோரிக்கைகளை முன்வைத்து இவை 24 மணி நேரத்துக்குள் நிறைவேற்றப்படவேண்டும்; இல்லாவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போவதாக இந்திய அரசுக்கு அறிவித்தார்.

திலீபனின் எந்தக் கோரிக்கைகளையும் இந்திய அரசு கவனத்தில் எடுக்கவில்லை. இராணுவ முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் சித்திரவதைக்குள்ளாகும் எமது சகோதர சகோதரிகளை உடன் விடுதலை செய்யவேண்டும். புனர்வாழ்வு என்ற போர்வையில் தமிழர்களின் பாரம்பரிய பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பெருமளவிலான சிங்களக்குடியேற்றங்களை தடை செய்யவேண்டும். இடைக்கால அரசு அமைக்கும் வரை பொலிஸ் நிலையங்களில் சிங்கள நிர்வாகத்தை சீரமைப்பு என்ற போர்வையில் சிங்களத்திணிப்பை நிறுத்த வேண்டும். பாடசாலைகளிலும் மக்கள் செறிந்துள்ள பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ், இராணுவ முகாம்கள் மூடப்படவேண்டும். சிங்கள குண்டர்படையான ஊர்காவல் படையைக் கலைத்து அதனிடமிருந்து ஆயுதங்களை திரும்பப்பெறவேண்டும் என்ற 5 கோரிக்கைகளும் இந்திய அரசினால் புறக்கணிக்கப்பட்டதைத் தொடர்ந்து 15-9-78 இல் திலீபன் நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் சாகும்வரை உண்ணாவிரதத்தைஆரம்பித்தார்.

தியாகப் போரில் ஆகுதியாகிக் கொண்டிருந்த திலீபனின் உண்ணாவிரதம் பற்றி இந்திய அரசு எவ்வித அக்கறையுமின்றி இருந்தது. நாட்கள் செல்லச் செல்ல திலீபனின் உடல்நிலை மிக மோசமடைந்தது. இதனால் உண்ணாவிரதத்தை கைவிடுமாறு பலர் திலீபனிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். திலீபன் தான் எடுத்த இலட்சியத்திலிருந்து இம்மியளவேனும் விலகமாட்டேன். என்று தனது இலட்சியத்தில் உறுதியாக நின்றார்.

கண்கள் மயங்கி, உடல் சுருங்கி, அடிக்கடி மயக்கமடையத் தொடங்கிய திலீபனைப் பார்த்த பலர் நீரை அருந்துமாறு கெஞ்சிக்கேட்டபோது அவர் மறுத்துவிட்டார்.

"நான் தொடங்கிய போர் புனிதமானது. இப்படி நீங்கள் கேட்பதே இந்தப் போராட்டத்தைக் களங்கப்படுத்துவதாக உள்ளது. தயவு செய்து உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு யாரும் என்னைக் கோர வேண்டாம் என்று உறுதியாகவும், இறுதியாகவும் அனைவர்க்கும் வலியுறுத்திக் கேட்டார் திலீபன்.

திலீபனின் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்து மாணவர்கள், பெண்கள், முதியோர் என மக்கள் வெள்ளம் நல்லூரில் திரண்டது தொடர்ந்து 12 நாட்கள் (265 மணித்தியாலங்கள்) தமிழின விடிவிற்காக உண்ணாவிரதம் இருந்து 26-9-87 காலை 10-48மணியளவில் தியாகி திலீபன் தியாக மரணம் அடைந்தார்.

துரை

### தியாகி திலீபன் நினைவு
# உண்ணாவிரதமும் சிரமதானப்பணியும்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேர்ணல் திலீபனின் 6ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி நாளை 16ம் திகதி உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படும் இடங்கள் மற்றும் பங்குபற்றுவோர் விபரம் வருமாறு:

**வலிகாமம் கோட்டம்:**

சங்கானை - அரசடி வைரவர் கோவில் - சங்கானை மக்கள், கோப்பாய்- நீர்வேலி வாய்க்காற்தரவை பிள்ளையார் கோவில் - சிறுப்பிட்டி மக்கள், சண்டிலிப்பாய்- ஆனைக்கோட்டை முத்தவிநாயகர் கோவில் - மானிப்பாய்மக்கள், உடுவில்/தெல்லிப்பளை - கன்னாகம் சிவன்கோவில் - உடுவில் மக்கள், யாழ்ப்பாணம்- நல்லூர் கந்தசுவாமிகோவில்- வண்ணை. சுருட்டு தொ. சங்., நல்லூர் - நல்லூர் கந்தசாமி கோவில் - கோண்டாவில்/ கந்தர்மடை மக்கள்.

**வடமராட்சி கோட்டம்:**

கரவெட்டி - சாமியன் அரசடி, நெல். இ. நெல். வர், சங். - அல்வாய் கிழ/தெற்கு மக்கள், உடுப்பிட்டி - உடுப்பிட்டி மத்தி வைரவர்கோவில் அச்சுவேலி மக்கள், பருத்தித்துறை- அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடி - புலோலி மத்தி/தென்மேற்கு சிற்றூர் மக்கள், சங்க உறுப்பினர்கள்.

**தென்மராட்சி கோட்டம்:**

பளை-பளை பிரதேசசபைமுன் புலோப்பளை சிற்றூர் விறகு வெ. சங். -வேம்பொடுகேணி சர் இ. த. க. பாடசாலை' கொடிகாமம்- புகையிரத நிலைய அருகாமை- வடவரணி இன்னம்மன் கோவிலடி, செல்வ ச. ச. நிலையம், மாகோவி ச. ச. நிலையம் வட-திலீபன், அல். வட. இடை. கு. சுப்பிரமணி மந்துவில் பாரதி வீதி, சாவகச்சேரி- மணலிகுணுய் பிள்ளையார் கோவில் - சங்கத்தானை மண்டுவில், சந்திரபுரம் மட். மத்தி- கல்வயல். மீசாலை கிழ. கூட்டு தொழிலாளர் சங்கம், மட்டு மத்தி. கீத்தி- நுணாவில் மேற்கு அ. த. க. பாடசாலை. கைதடி வட்டம் கைதடிசந்தி- நாவற்குழி, கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்.

**தீவகக் கோட்டம்:**

நல்லூர் கோவில் முன்றலில் தீவை முஸ்லிம் வட்டாரம், ஸ்ரீகணேச வித்தியாலயம் புங்குடுதீவு, நடராசா வித்தியாலயம் வேலணை.

சிரமதானம் மேற்கொள்ளப்படும் இடங்கள் பங்குபற்றுவோர்.

**வலிகாமம் கோட்டம்**

சங்கானை / சித்தன்கேணி - பிரதான வீதி திருத்தம் - சண்டிலிப்பாய் - கட்டுடை குடியேற்றத் திடல் வீதி துப்பரவு செய்தல் - சுபாஸ் கல். ச. ச. நிலையத்தினர்.

—ஈ-செ

# வீரப்பன் கும்பலை சேர்ந்த மேலும் 10 பேர் கைது

(சென்னை)

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் கும்பலைச் சேர்ந்த மேலும் 10 பேர் தமிழக அதிரடிப் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் வீரப்பனின் நெருக்கமான சகாக்களாவர்.

வீரப்பன் கும்பலைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த அதிரடிப் பொலிஸாருக்கும் வீரப்பன் கும்பலுக்குமிடையே மருதூர் காட்டுப்பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் ஏற்பட்டதையடுத்து மேற்படி 10 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 50 கிலோ ஜெலற்றின் குச்சிகள், 75 கிலோ வெடிமருந்து இரு துப்பாக்கிகள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

—ஈ-செ

## தியாகி திலீபன்

இங்கு ஒரு ஒளி வீச
எரிந்தும் எரியாதவன் நீ
எங்கள் தமிழ்த் தேசம்
எனும் கருவில் நிலைத்தவன் நீ
சங்கம் வளர்த்த தமிழ்
சாகாது வேரோச்ச
அங்கு அவர் கண்ட
அஹிம்சைப் போர் வென்றவன் நீ

நீரின்றி உணவின்றி
நெஞ்சமதில் உறுதியுடன்
ஓர்மான உணர்வென்ற
உணவுண்டு தமிழ் ஈழ
வேரோடி நிமிர்ந்த மரம்
வீழாது தளைத்தோங்க
நீராக உணவாக
நினைத்தந்த தியாகி நீ!

- நெடுந்தீவு லக்ஸ்மன்

**வளமான வாழ்வுபெற ஏர்க்களம் நாம் சென்றிடுவோம்**

## ★ சம்பள உயர்வு கோரிய

# தொழிலாளர் மீது பொலிசார் குண்டாந்தடிப் பிரயோகம்

(கொழும்பு)

கட்டுநாயக்காவிலுள்ள தொழிற்சாலை ஒன்றைச் சேர்ந்த ஊழியர்கள் சம்பள உயர்வு கோரிக்கையடுத்து அவர்கள் தொழிற்சாலைக்குள் பிரவேசிக்க தடை விதிக்கப் பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலையில் சுமார் 3000 தொழிலாளர் வரை கடமை புரிந்து வந்த தாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் நேற்று முன் தினம் இந்த ஊழியர்கள் பொலிஸாரினால் கடுமையாக தாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தில் இந்தத் தொழிற்சாலை அமைந்துள்ளது. இதில் இறப்பர் கையுறைகள் தயாரிக்கப்பட்டுவந்தன.

தொழிற்சாலையின் முன் நேற்று முன்தினம் இந்த ஊழியர்கள் கூடியிருந்தபோது அங்கு வந்த பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வெடிக்க வைத்ததுடன் குண்டாந்தடிப் பிரயோகமும் மேற்கொண்டனர்.

பெண்கள் உட்பட பல தொழிலாளர்கள் இந்தச் சம்பவத்தில் படுகாயமுற்றதாக தெரிவிக்கப்படுகிறது (இ-ரி)

## ஐ. நா. அலுவலகத்திற்கு அரபாத் விஜயம்

(நியூயோர்க்)

சுமார் 19 ஆண்டுகளுக்கு பின்னர், நியூயோர்க் நகரிலுள்ள ஐக்கிய நாட்டுதலைமையகத்துக்கு பி. எல். ஓ. தலைவர் யசீர் அரபாத் நேற்று சென்றிருந்தார்.

பலஸ்தீன கட்டுப்பாட்டிலுள்ள ஜெரிக்கோ நகரம் ஐ. நா.வின் நிதியுதவியை பெற்றுக் கொள்ளும் இடமாக கணிப்பட்ட முறையில், யசீர் அரபாத், ஐ. நா. செயலர் பூத்ரோஸ் பூத்ரோஸ் காலியை சந்தித்து உரையாடவுள்ளார். எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இம்மாதம் 25-ம் திகதி வாஷிங்டனின் கூடவிருக்கும் ஐ. நா. மாநாட்டில் பலஸ்தீன சுயாட்சி பெறும் பகுதிகட்கு நிதியுதவி வழங்குவது பற்றி விவாதிக்கப்படும் என ஜப்பானிய நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் இஸ்ரேலும் பாலஸ்தீன இயக்கமும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை இந்தியா, பிரான்சு, ஜப்பான் வரவேற்றுள்ளன. (ரோ)

## ● மட்டக்களப்பு வாவியில்

# மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் வள்ளங்கள் பறிமுதலாகும்

### படை அதிகாரி எச்சரிக்கை

(மட்டுநகர்)

மட்டக்களப்பு வாவியிலும் கடற்பிரதேசத்திலும் மீன் பிடித்தொழிலில் ஈடுபடும் வள்ளங்கள் உரிமையாளர்களினால் பதிவு செய்யப்படாவிட்டால் பறிமுதல் செய்யப்பட்டு சொந்தக்காரர்கள் மீது வழக்குத் தொடரப்படுமென பாதுகாப்பு இணைப்பு அதிகாரி பிரிகேடியர் ரோகான் குணவர்த்தனவினால் அறிவிக்கப் பட்டுள்ளது.

வள்ளச் சொந்தக்காரர்கள் கடற்றொழில் திணைக்கள அலுவலகத்தில் பதிவுசெய்து பதிவிலக்கத்தைப் பெற்று வள்ளத்தில் 3 அங்குல அளவில் இலக்கத்தைப் பொறித்தல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் 133 இயந்திரப் படகுகளும் 122 கண்ணாடி இழைப் படகுகளும், 1413 வாவி வள்ளங்களும், 407 கடல் வள்ளங்களும், 283 கரைத்தோணிகளும் தற்போது மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (71-ரி)

# 7,147 ஈழத் தமிழ் அகதிகள் திருமலை வந்தடைந்தனர்

(சென்னை)

இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் 7,147 பேர் திருகோணமலை வந்து சேர்ந்துள்ளனர்.

ஐ. நா. சபையின் கண்காணிப்புத்திட்டத்தின் கீழ் இவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்திய அதிகாரிகள் தம்மை வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்புவதாக அகதிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும் 3000 தமிழர்கள் இலங்கைக்கு திரும்பக்காத்துக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

சுமார் 77,000 ஈழ அகதிகள் தமிழகத்திலுள்ள அகதி முகாம்களில் தற்போது வசித்து வருவது குறிப்பிடத்தக்கது. -ரி

# இலங்கையில் நாளொன்றுக்கு நூறு மோட்டார் விபத்துக்கள்

(கொழும்பு)

இலங்கையில் நாளொன்றுக்கு 100 க்கு மேற்பட்ட மோட்டார் விபத்துக்கள் இடம் பெறுவதாகவும் இவற்றில் தினமும் 5 மரணங்கள் சராசரி இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகமான பாதசாரிகளே விபத்துக்களால் பலியானதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளார். சென்ற ஆண்டில் 36 ஆயிரத்து 650 விபத்துக்கள் இடம் பெற்றன. இதில் ஆயிரத்து 504 மரணங்கள் சம்பவித்தன. (கே-ரி)

# பஸ் விபத்தில் 60 பேர் பலி

(புதுடில்லி)

பீகார் சரன் மாவட்டத்தில் பெரிய பள்ளத்தில் தேங்கியிருந்த தண்ணீருக்குள் ஒரு பஸ் விழுந்ததில் 60 பேர் பலியாகினர்.

எதிரே வந்த வாகனமொன்டன் மோதுவதை தவிர்ப்பதற்காக பஸ்ஓட்டுநர் முயன்றபோது பஸ் பள்ளத்தில் விழுந்து சேதமும் அடைந்துள்ளது. -கே

# மண்ணெண்ணையுடன் நில்கிரி பருத்தித்துறை வருகிறது

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை முகத்தில் தற்பொழுது யாழ். மாவட்டத்துக்கு வேண்டிய ஒரு தொகுதி மண்ணெண்ணையை ஏற்றிக் கொண்டு நிற்கும் நில்கிரி கப்பல் இன்னும் சில தினங்களில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையுமென தெரிய வருகிறது.

இதேவேளை யாழ். மாவட்டத்துக்கு தேவையான ஒரு தொகுதி உரவகைகளை ஏற்றிக்கொண்டு லுகுணு கப்பல் விரைவில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்து சேருமென செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (162-சி)

# உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்கு வேண்டிய அத்தியாவசிய உணவுப் பொருட்களை பெருமளவில் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு யாழ். மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது ஏற்கனவே பல கட்டிடங்கள் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது தற்போது கிளஸர் தியேட்டரும் உணவுப் பொருட்களின் களஞ்சியசாலையாகப் பயன்படுத்தப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை உணவுக்கட்டுப்பாட்டு திணைக்கள அதிகாரிகள்மேற்கொண்டு வருகின்றனர். இப்படமாளிகை திருத்த வேலைகள் முடிவடைந்ததும் கொழும்பிலிருந்து எடுத்துவரப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இங்கு களஞ்சியப்படுத்தப்படுமென செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (162-சி)

### இன்று முதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் எங்கும் தொங்கவிடப் பட்டுள்ளன

அத்துடன் கொட்டில்கள், பந்தல்கள் அமைக்கப்பட்டு அவை அழகாக அலங்கரிக்கப்பட்டு திலீபனின் உருவப் படங்கள் வைக்கப்பட்டு சுடர் ஏற்றி மக்கள் அனைவரும் எழுச்சியுடன் திலீபன் நினைவு தினத்தை அனுஷ்டிக்கின்றனர்

சிரமதானம், நினைவு தின கூட்டங்கள் உட்பட பல பொதுப்பணிகளும் இந்நாட்களில் மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் உண்ணாவிர நிகழ்வுகளும் குடாநாடு பூராகவும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்கள் அரச ஊழியர்கள் உட்பட இவ்வப்பகுதியிலுள்ள அனைவரும் பங்குபற்றும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாடசாலைகள் மற்றும் ஆலயங்களிலும் விசேட நிகழ்வுகளும் இன்று முதல் நடைபெறவுள்ளன. (158, 157 - சி)

### கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வதாகவும் கொழும்பு நகருக்குள் ஊடுருவியுள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாலே இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகிறதாம்,

இது குறித்த விபரங்கள் கிடைத்து வருவதாகவும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன (ரி)

### வீரச்சாவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்டன் கதிரவன் அல்லது லோகன் (வீரப்பு சந்திரன் 2ம் யூனிற் சேமமடு) என்பவர் வீரச்சாவு அடைந்தார்.

இதேவேளை நேற்று முன் தினம் இரவு யாழ். மாவட்டத்திலேற்பட்ட எதிர்பாராத விபத்து ஒன்றில் ஒருபோராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். கப்டன் வண்ணம் (சிதம்பரப்பிள்ளை வடிவேல் நெடுங்கேணி) என்பவரே வீரச்சாவைத் தழுவிக்கொண்டவராவார். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (ரி)

### ஹெப்பிடைட்டிஸினால்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மருந்துவத் தாதிகள் மூலமும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற எயிட்ஸ் நோயாளி ஒருவரைக் கவனித்து வந்த மருத்துவ தாதிகளின் இரத்தத்தைப் பரிசோதனை செய்து பார்த்த போது இந்த மூன்று மருத்துவத் தாதிகளுக்கும் ஹெப்பிடைட்டிஸ் நோய் பீடித்திருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டது.

அரசாங்க ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் தாதிமாருக்கு ஹெப்பிடைட்டிஸ் நோயிலிருந்து பாதுகாப்பு வழங்க தடுப்புநடவடிக்கைகளை வழங்குமாறு அரசதாதிமார் ஐக்கிய தொழிற்சங்கம் அரசைக் கேட்டிருந்தது.

இதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிடில் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுமென மேற்படி சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (இ)

### ஐயாயிரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய படையினரும் பாகிஸ்தான் படையினரும் ஐ. நா. கொடியின் கீழ் பணி புரியவுள்ளனர். இருந்தபோதும் இவர்கள் புறம்பாக வெவ்வேறு மாகாணங்களிலே பணிக்கமர்த்தப்படவுள்ளனர்.

மற்றும் அமெரிக்க, கனேடிய, எகிப்திய அமைதி காக்கும் படைகளுடன் சோமாலியவில் 30 ஆயிரம் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார் (கே-ரி)

### கொழும்பிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகள் மிகப் பெரிய தாக்குதல் ஒன்றை இப்பகுதியில் நடத்த திட்டமிட்டிருப்பதாக கிடைத்த தகவல்களை அடுத்தே பாதுகாப்பு அமைச்சு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

விடுதலைப்புலிகள் தரப்பைச் சேர்ந்த உறுப்பினர்களும், தற்கொலைப் படையினரும் மற்றும் வெடிகுண்டுப்பிரிவினரும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வந்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சுக்கு தகவல் கிடைத்துள்ளதாம்

கடந்த ஓரிரு தினங்களில் மாத்திரம் விடுதலைப்புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் 30 பேர் வரை பாதுகாப்புப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-ரி)

### இந்தியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டம் வெகுவாக பாதிக்கிறது என இந்தியா கூறுகிறது.

முன்னைய உடன்படிக்கைகளின்படி கச்சதீவு பகுதிகளில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க உரிமையளிக்கப்பட்டிருக்கிறது.

இப்படியான உரிமையிருக்கும் போது, இலங்கை அரசு தன்னிச்சையாகச் சட்டம் இயற்றியுள்ளது. மேலும் இத்தடைச்சட்டம் பற்றி இந்திய அரசுடன் இலங்கை அரசு கலந்தாலோசிக்க வில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

தமிழர்களுக்கு இத்தடை புதிதல்ல, ஆனால் புதிய தடைச்சட்டம் இந்திய மீனவர்களை வெகுவாகப் பாதிக்கும். இந்திய மீனவர்கள் புலிகள் என்ற சந்தேகத்தின்பேரில் கடப்படலாம். இப்படி நடந்தும் விட்டது.

இந்திய மீனவர்களுக்கு இந்த புதிய தடைச்சட்டம் அபாயகரமானதால் இலங்கை அரசு இச்சட்டத்தை மீள் பரிசீலனை செய்யவேண்டுமென இந்தியா கேட்டுக்கொண்டுள்ளது.

மீள்பரிசீலனை செய்ய மறுத்தால் இரு நாடுகளுக்குமிடையே தற்போது நிலவும் நல்லுறவு கசப்படைக்கூடுமென பி. பி. சி. தெரிவித்தது. (கே. இ-சி)

கிரிக்கெட்:

# தென்னாபிரிக்கா 231-5

(கொழும்பு)

இலங்கை அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நேற்று கொழும்பு சரவணமுத்து விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

தென்னாபிரிக்க அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து ஆட்டமுடிவில் 231 ஓட்டங்களை எடுத்தது.

டீகிளனட் 85 ஓட்டங்கள், டி. ரிச்சர்ட்சன் 81 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழக்காது இருக்கின்றனர்

முத்தையா முரளீதரன் 31 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இன்று இரண்டாவது நாள் ஆட்டம் தொடரும். (இ-ரி)

### தமிழ் பகுதிகளுக்கு

1-ம் பக்கத் தொடர்ச்சி)

நோர்வே, சுவிஸ் ஆகியநாடுகளால் வழங்கப்பட்ட உதவிகளை உலக உணவுத் திட்ட நிறுவனமே தனது செலவில் இலங்கைக்கு எடுத்துவந்தது.

இத்திட்டம் உதவியின்படி 83 லட்சத்து 40 ஆயிரம் டொலர் பெறுமதியான சீனி, அரிசிபோன்ற உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

இந்த உதவிகளை பெற்ற சிறிலங்கா அரசு வடக்கு கிழக்குப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதாகக் கூறிவிட்டு சிங்களப்பகுதிகளுக்கு வழங்குகிறது. புத்தளம், அனுராதபுரம், பொலனறுவை, கொழும்பு, குருநாகல் மாவட்டங்களில் 162 நிலையங்களில் வைத்து இவற்றை சிங்களவர்களுக்கு சிறிலங்கா அரசு வழங்கி வருகிறது

இந்தநிறுவனத்தால் சென்ற ஆண்டு வழங்கப்பட்ட 36 லட்சம் ரூபா பெறுமதியான உதவிகளையும் இவ்வாறே சிறிலங்கா அரசு செய்துள்ளமை குறிப்பிடதக்கது. (ரி)

இப்பத்திரிகை ""ஈழநாடு"" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licenee Number B/10 336/B: